மலர் : 1, இதழ் : 2

E - ISSN 2456 - 5571

சீர்மிகு

# வளர் தமிழ் ஆய்வு

## (பன்னாட்டு ஆய்விதழ்)

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

முதன்மைப் பதிப்பாசிரியர்

**முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2022**

சீர்மிகு **வளர் தமிழ் ஆய்வு**

**[பன்னாட்டு ஆய்விதழ்]**

**மலர் : 1** **இதழ் : 2**

**E-ISSN : 2456-5571**

**வளர் தமிழ் ஆய்வு மன்றம்**
**மற்றும்**
**எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்**
**இணைந்து நடத்திய**
**பதினெட்டாவது பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்விதழ்**

வெளியீடு :
போதி பன்னாட்டு ஆய்விதழ்
வாழ்வியல் புலங்கள், கலை மற்றும் அறிவியல்
சிறப்பிதழ்

மே - 2022

*முதன்மைப் பதிப்பாசிரியர்*
**முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்**

*பதிப்பாசிரியர் குழு*
**முனைவர் தாயம்மாள் அறவாணன்**
**முனைவர் க.நாகநந்தினி**
**முனைவர் கு.பெரியசாமி**
**முனைவர் தி.சாந்தி**

**19. ரா. பிரியா**
அகநானூற்றில் நம்பிக்கைகள் 73

**20. ஜோ.பிரின்ஸ்**
மதுரை இளங்கவின் படைப்புகளில் கல்விச் சிந்தனைகள் 75

**21. ரா.பிரேமலதா**
திருமூலமும் திருமந்திரமும் 78

**22. ரா. பிரேம்குமார்**
வைரமுத்துவின் படைப்புகளில் 'கலாச்சாரக் குறியீடுகள்' 81

**23. ஆ.பூமிச்செல்வம்**
ஒப்பியல் அணுகலில் 'புதுமைப்பித்தனும் மாப்பஸானும்' 85

**24. கு.பெரியசாமி**
புதுக் கவிதையில் தலித்தியம் 90

**25. இரா. பொன்னி**
சிவனாரின் 'மேகலை நாடகம்' ஒரு பார்வை 94

**26. ப.மகாலெட்சுமி**
பாவேந்தரும் தமிழும் 97

**27. செ.மகேஸ்வரி**
உடல் உள நலத்திற்குத் தாவர உணவு 100

**28. நா.மணிகண்டபிரபு**
சாத்திரியின் 'அகதிக் கொடி' சிறுகதையில் அகதி தஞ்சக் கோரிக்கைக்கோரும்
ஓர் ஏதிலியின் அவலநிலை 104

**29. ர.மணிகண்டன்**
ஐம்பூதங்களில் ஒன்றான நிலத்தின் தன்மைகள் 109

**30. மா.மாரியம்மாள்**
அக இலக்கியத் தலைவியின் மனப் போராட்டங்கள் 113

**31. சு.மீனலோசினி**
வைரமுத்துவின் பார்வையில் பாரதி 116

**32. மா.மீனாட்சி சுந்தரம்**
புறநானூற்றுப் பெண்பாற் புலவர்கள் பார்வையில் 'பெண்களின் வீரம்' 120

**33. பா.முத்தீஸ்வரி**
திருவள்ளுவரின் பார்வையில் அரசியல் 123

**34. இரா.முத்து**
தமிழ் சித்தர்கள் சிந்தனையில் இயற்கை மருத்துவம் 126

**35. து.முத்துக்குமார்**
மு. சுயம்புலிங்கம் கவிதைகளில் நிலமும் அரசியலும் 130

**36. சு.முத்து இலக்குமி**
வளர் தமிழ் ஆய்வு மன்றம் ...! கடந்து வந்த பாதை....! 133

**37. வெ.முருகன்**
அவ்வையாரின் ஆத்திசூடி பதிப்பும் உரைவேறுபாடுகளும் 135

**38. செ. மெல்வின் ராஜா**
புறநானூற்று புலவர்களின் பசியும் மன்னர்களின் கொடையும் 139

**39. சு.மேகலா**
சோளகர் தொட்டி நாவலில் வழிபாட்டு மரபுகள் 142

# சிவனாரின் ‘மேகலை நாடகம்’ ஒரு பார்வை

## முன்னுரை

மதுரை கூலவாணிகன் சாத்தனரால் இயற்றப்பட்ட சீரிய செந்தமிழ்க் காப்பியம் மணிமேகலை. தமிழ்த்தாயின் இடையில் அணியும் அணிகலனாகச் சிறப்புறும் மணிமேகலை சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம், புரட்சிக் காப்பியம் என்றெல்லாம் பெயர்பெறும். இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை இம்மூன்றையும் ஒருங்கே வலியுறுத்தும் இந்நூல் மனித வாழ்வு செம்மையடைய வழிகாட்டுவதாகும். இத்தகு சீர்மிகு நூலை அடிப்படையாகக் கொண்டு முனைவர் ச. சாம்பசிவனார் அவர்கள் மேகலை நாடகமாக எழுதி 1982 இல் வெளியிட்டுள்ளார். இதன் மறுபதிப்பு 1985, 1986 களிலும் வெளிவந்துள்ளது. சிவனாரின் மேகலை நாடகம் யாக்கப்பட்ட விதம், அமைப்பு, இலக்கு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## மணிமேகலை - நவீன நாடகங்கள்

எஸ்.எம்.ஏ.ராமின் ‘மணிமேகலையின் கண்ணீர்’ மற்றும் ‘ஆபுத்திரனின் கதை’, இன்குலாபின் ‘மணிமேகலை’, மு.ராமசாமியின் ஆபுத்திரன் இவை மணிமேகலை காப்பியத்தை அடியொற்றி வந்த நவீன நாடகங்கள். சமகால வாழ்வுக்கு ஏற்ற வகையில் சிற்சில மாற்றங்கள் கொண்டும் புதுவகை நாடக உத்திகள் கொண்டும் இவற்றைப் புனைந்துள்ளனர். ஆனால் இவற்றுக்கு மாறாக சிவனாரின் மேகலை நாடகமானது, மூலத்தை அப்படியே சிறிதும் மாற்றமில்லாது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் அறிமுகம்

முத்தமிழ் வளர்த்த மதுரையில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ‘செந்தமிழ்ச் செல்வர்’, ‘தமிழாகரர்’, ‘நல்லாசிரியர்’, ‘திருக்குறள் செம்மல்’ என்றெல்லாம் தமிழ் கூறு நல்லுலகால் போற்றப் பெறுபவர் மூதறிஞர் முனைவர் சாம்பசிவனார். இவர் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்; மரபுக் கவிஞர். 29.09.1929 இல் தேனி மாவட்டம் வள்ளல்நதி என்ற கண்டமநாயக்கனூர் என்னும் ஊரில் பிறந்தவர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர்தம் படைப்புகள் தொல்காப்பியம் - சங்க இலக்கியம்- திருக்குறள்- காப்பியம் - கல்வெட்டு என்ற தலைப்புகளில் ஏறத்தாழ 77. கோலாலம்பூர், சிங்கப்பூர், மொரீசியசு ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட உலகளாவிய மாநாடுகளில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் எழுதியுள்ளார். வெளி நாடு மற்றும் உள் நாடுகளில் நிகழ்த்திய வானொலிப் பொழிவுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்பல இவரது நற்றமிழ் வளர்ப்புக்கு நற்றுணையாய் இருந்தது ‘தமிழ் மாருதம்’ எனும் இதழ்ப்படைப்பு ஆகும்.

தம் வாழ்நாள் முழுக்கத் தமிழுக்குத் தொண்டாற்றிய இத்திருமகனார் இறைவன் திருமலரடியை அடைந்தாலும் இவரது படைப்புகளும் ஆராய்ச்சிகளும் தமிழ்ப்பயிருக்கு எப்பொழுதும் உரமூட்டும் என்பதில் ஐயமே இல்லை எனலாம்.

## நூல் வாயில்

நூலின் முதற்பகுதியாக வாயில் எனும் தலைப்பில் சாம்பசிவனார், மணிமேகலை காப்பியச் சிறப்புகளைப் பதிவு செய்தும் தான் நாடகமாக்கிய காரணத்தையும் கவிவடிவில் யாத்துள்ளார். மணிமேகலைக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரை, சாமிநாத ஐயரின் முதற்பதிப்பு, தெ.பொ.மீ, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை முதலான பெரியோர்களின் ஆராய்ச்சியுரை சிறப்புப் பெற்றுள்ளதை வாயில் எனும் பகுதியில் முதற்கண் விளக்கிச் செல்கிறார் ஆசிரியர்.

பசி போக்கும் அற மாண்பு, சிறைக் கோட்டங்களை அறக்கோட்டமாக மாற்றி அமைத்தல், கள்ளுண்ணாமை, பரத்தைமையை ஒழித்தல், யாக்கை, செல்வம், இளமை நிலையில்லாதது போன்ற மணிமேகலை இடம்பெறும் சிறப்புகளை எல்லாம் இப்பகுதியில் சுட்டியுள்ளார்.

முனைவர் இரா. பொன்னி, பாத்திமா கல்லூரி, மதுரை.


E-ISSN 2456-5571